# கட்டுனர் வல்லுனர் சங்கம் கருத்தரங்கம்

நாமக்கல்லில் கட்டுனர் வல்லுனர் சங்கம் சார்பில் கருத்தரங்கம் நடந்தது.

நாமக்கல் கட்டுனர் வல்லுனர் சங்கம் மற்றும் டெக்னிகெமி நிறுவனம் சார்பில் கோல்டன் பேலஸ் ஹோட்டலில் கட்டிட கலை குறித்த கருத்தரங்கம் நடந்தது.

சங்க தலைவர் கணேசன் தலைமை வகித்தார். டெக்னிகெமி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ரவி, கட்டிடத்தில் ஏற்படும் விரிசல்கள், கான்கிரீட் வெடிப்புகள், தண்ணீர் கசிவு ஆகியவற்றுக்கான காரணம் மற்றும் அவற்றை சரி செய்யும் முறைகள் குறித்து வீடியோ படங்களுடன் விளக்கி பேசினார்.

நிகழ்ச்சியில் பில்டர்ஸ் அசோசியேசன் செயலாளர் நடராஜ், இணை செயலாளர் வெங்கடாசலம், பொருளாளர் மணி, இன்ஜினியர்கள் தேவராஜ், கமலசேகர், சுந்தரராஜ், கான்ட்ராக்டர்கள் செல்வம், கணேசன், முருகேசன், கிரஷர் உரிமையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.